வேண்டும். அடிக்கடி வொயர்மேன்கள், மற்றும் மின்சார அலுவலர்களை போய் சரிப் பார்க்க வேண்டும் என்கிற உத்திரவை அரசாங்கம் இட வேண்டும்.

மேலும் கிராமங்களில் உணவு வினியோகம் குறித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கிராமங்களில் கிராம வாரியாக நியாய விலைக் கடைகள் இருக்கின்றன. அரசாங்கத்திலிருந்து கொடுக்கப்பட்டிருக்கிற ஆணையின்படி ஒரு கிலோ அரிசி 1¾ ரூபாய்க்கு கொடுக்கப்பட வேண்டும் என்றும் அதற்கு தனியாக பில்கள் வைத்திருக்க வேண்டும் என்றும் இருக்கிறது. அந்த பில்கள் மூலமாகத் தான் மக்களுக்கு உணவுப் பொருள்கள் வினியோகம் செய்ய வேண்டும் என்றும் அதில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அங்கே உண்மையில் நடப்பது என்னவென்றால் கார்டுகளை வாங்கிக் கொண்டு, உணவுப் பொருள்களை இஷ்யூ செய்வதற்கான பதிவுகளை அதில் பதிந்துக் கொண்டு, ஒரு கிலோ அரிசி 2 ரூபாய் வீதம் வழங்கப்படுகிறது. அதுவும் எந்தவிதமான பில்களும் கொடுக்கப்படாமலேயே இதனால் கிராம மக்களுக்கு பல விதங்களில் தொல்லைகள் ஏற்படுகின்றன............... பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் 106-வது விதியின் கீழ் ஒரு அறிக்கையினை சமர்ப்பிப்பார்கள். பிறகு, திரு. இராமசாமி அவர்கள் தொடர்ந்து பேசுவார்.

8. அறிக்கை அளித்தல்.

கேரளா மாநிலம் வழங்கும் உபரி மின்சாரம் பற்றிய ஒப்பந்தம்.

மாண்புமிகு திரு. ச இராமசந்திரன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 106-ன் கீழ் பேரவைக்கு ஓர் அறிக்கையை அளிக்கின்றேன்.

கேரள மாநில உபரி மின்சாரத்தை தமிழ்நாட்டிற்குப் பெற வேண்டும் என்பதற்காக கேரள மாநில மின் துறை அமைச்சரோடு இன்று முற்பகலில் நான் நடத்திய பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து கீழ் காணும் ஒப்பந்தம் தமிழ்நாட்டிற்கும் கேரள மநிலத்திற்கும் இடையில் ஏற்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.

கேரள மாநிலம் தனது தேவைக்கும் ஏற்கெனவே ஒப்புக் கொள்ளப்பட்ட இனங்களுக்கும் போக மீதம் உள்ள உபரி மின் சக்தியை தமிழ்நாட்டிற்கு கீழ்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு வழங்கும்:—

அறிக்கை அளித்தல்

திரு. ச. இராமச்சந்திரன் 1983 சனவரி 28]

1. இந்த ஒப்பந்தம் 12-2-1983 முதல் 31-12-1985 வரை அமுலில் இருக்கும்,

2 12-2-1982 முதல் 11-2-1984 வரையிலான காலத்திற் யூனிட் ஒன்றுக்கு 35 காசுகள் எனவும், 12-2-1984 முத 31-12-1985 வரையான காலத்திற்கு கட்டண வீதங்கள் 11-2-1984 க்குள் பேச்சு வார்த்தைகள் மூலம் முடிவு செய்யப் படும் என்றும் முடிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்டுள்ள கட்டணம் மத்திய ஆயத் தீர்வை கட்டணமாகிய யூனிட்டுக்கு இரண்டு காசுகளையும் உள்ளடங்கியதாகும். மத்திய ஆயத் தீர்வையை அதிகப்படுத்தினால் அதனை தமிழ்நாடு கேரள அரசுக்கு வழங்கும். மத்திய ஆயத் தீர்வையில் எந்த வித குறைவு ஏற்பட்டாலும் அந்த அளவிற்கு தமிழ்நாடு, தான் செலுத்த வேண்டிய கட்டண விகிதங்களை குறைத்துக் கொள்ளும்.

3. மேற் குறிப்ட்டுள்ள கட்டணம் உச்ச நேரத் தேவை கட்டணத்தை உள்ளடக்கியதல்ல. மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரையில் ஆன உச்ச நேரக் காலத்திற்கான கட்டணம் தென் பிராந்திய மின்சார அமைப்பு முடிவு செய்துள்ள கட்டண அடிப்படையில் தமிழ்நாடு அரசு வழங்கும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்— அவைமுன் வைக்கப் பட்டுள்ள அறிக்கையின் மீது இப்போது எந்தவிதமான விவாதமும் கிடையாது. அப்படி ஏதாவது கூற விரும்பினால், உறுப்பினர் கள்பேசும்போது அந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுங் கள். இப்போது திரு. எஸ். என். இராமசாமி அவர்கள் தொடர்ந்து பேசுவார்.

6 ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் விவாதம்

(தொடர்ச்சி)

திரு.எஸ்.என்.இராமசாமி— துணைத் தலைவர் அவர்களே, இந்த சத்துணவு திட்டத்தைப் பற்றி நாமெல்லாம் இங்கே அதிக மாக பேசிக் கொண்டிருக்கிறோம் என்றாலும் கூட, சில கிராமங் களைப் பொறுத்தவரையில் அதில் முறைகேடுகள் இருக்கின்றன. உதாரணத்திற்கு ஒரு கிராமத்தை எடுத்துக் கொள்வோமே யானால், அதில் ஒரு பள்ளிக்கூடத்தில் 100 பிள்ளைகளுக்கு சாதம் போடுவதாக—சாப்பாடு போடுவதாக கணக்கிட்டு அங்கே எழுதிவிடுகின்றனர்.

(முற்பகல் 1-20)

நான் நேரடியாகச் சென்று பார்த்தபோது அங்கே 30 பிள்ளைகளுக்கு மேல் சாப்பிடுவதில்லை என்பதைக் கண்டேன் தமிழகத்தின் பாலபள்ளிகளிலும், பள்ளிக்கூடங்களிலும் இப்படிப்பட்ட நிலைமை இருப்பதை நாங்கள் நேரடியாகச்